# இப்பொழுது, நீங்கள் தேவனுடைய பிள்ளைகள்!



சகோ. மோகன் சி. லாசரஸ்

# இப்பொழுது, நீங்கள் தேவனுடைய பிள்ளைகள்! நீங்கள் பாக்கியவான்கள்!

இயேசு கிறிஸ்துவை இருதயத்தில் ஏற்றுக் கொண்ட நீங்கள் பாக்கிவான்கள்... பாக்கியவதிகள்!

இயேசு கிறிஸ்து உங்களை நேசிக்கிறார். ஆகவேதான், அவர் இந்தக் கூட்டத்திற்கு உங்களை அழைத்து வந்து, உங்களை சந்தித்திருக்கிறார்.

**“நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்;” (யோவான் 15:16)** என்ற இயேசு கிறிஸ்து, இன்று உங்களை தன்னுடைய பிள்ளையாகத் தெரிந்து கொண்டார்.

ஊழியக்காரர் பிரசங்கிக்கும்போது, இயேசு கிறிஸ்துவே அவர் மூலமாக உங்களோடு பேசினார்.

ஆகவேதான் நீங்கள் பாவத்தை விட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ள முன் வந்தீர்கள்.

தேவனுடைய சத்தத்திற்குக் கீழ்படிந்து, இயேசு கிறிஸ்துவை உங்கள் வாழ்க்கையில் ஏற்றுக் கொள்ள நீங்கள் எடுத்த இந்த தீர்மானம், உங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத முக்கிய மான ஒரு சம்பவம்.

நீங்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ள அர்ப்பணித்து முன்வந்த போது, உங்களுக்குள் என்ன நடந்தது? என்பதை நீங்கள் அறிந்து கொண்டால்தான், ஆண்டவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆகவே, ஜெபத்தோடு தொடர்ந்து கவனமாக வாசியுங்கள்.

# உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது!



உங்கள் பாவங்களை விட்டு மனந்திரும்பி, இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டபடியினால், **இதுவரை நீங்கள் செய்த எல்லாப் பாவங்களும் உங்களுக்கு மன்னிக்கப்பட்டது.** உங்கள் ஜென்ம பாவங்கள், நீங்கள் சிறு வயதுமுதல், அறிந்தோ, அறியாமலோ, தெரிந்தோ, தெரியாமலோ செய்த எல்லா பாவங்களையும் ஆண்டவர் உங்களுக்கு மன்னித்து விட்டார்.

உங்கள் பாவங்களையெல்லாம் இயேசு கிறிஸ்து சிலுவையில் சுமந்து தீர்த்து விட்டபடியினால், இயேசு கிறிஸ்து மூலமாக உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது **(1 பேதுரு 2:24). இதை நீங்கள் விசுவாசிக்க வேண்டும்.**

**"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." நீதி. 28:13.**

**"...இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்." (1 யோவான் 1:7)** என்ற தேவனுடைய வார்த்தையின்படி, பாவங்களை அறிக்கை செய்து, ஜெபித்த உங்களுக்கு ஆண்டவர் இரங்கினார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, உங்கள்

இருதயத்தை சுத்திகரித்திருக்கிறது. **இனிமேல் பழைய பாவங்களுக்கும், உங்களுக்கும் சம்பந்தமில்லை.** இதுவரை நீங்கள் செய்த பாவங்கள் எத்தனை பெரியதாயிருந்தாலும், எத்தனை கொடியதாயிருந்தாலும், அந்தப் பாவங்களை யெல்லாம் ஆண்டவர் மன்னித்து மறந்து விட்டார்.

**"மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர்** –இயேசு கிறிஸ்து– **நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்." (சங். 103:12)**

இந்த தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, ஆண்ட வரைத் துதியுங்கள்.

"ஆண்டவரே, என் பாவங்களையெல்லாம் எனக்கு மன்னித்து விட்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம்! இயேசு கிறிஸ்துவின் பரிசுத்தமுள்ள இரத்தம் என்னைக் கழுவி விட்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம்! மேற்குக்கும், கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய், என் பாவங்களை என்னை விட்டு நீர் விலக்கி விட்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம்!" என்று கர்த்தரைத் துதியுங்கள்!

இனிமேல் உங்கள் பழைய பாவங்களையெல்லாம் சொல்லி, நீங்கள் ஜெபிக்க வேண்டியதில்லை.

ஒரு சிறு பெண், தன் வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த போது, மேஜையில் இருந்த ஒரு கண்ணாடிப் பாத்திரத்தை உடைத்து விட்டாள். வீட்டில் யாரும் அதைப் பார்க்கவில்லை. "யாருக்கும் தெரியாமல், அந்த இடத்தை விட்டு ஓடி விடலாமா?" என்று எண்ணினாள்.

"ஐயோ, அது தவறு. நான்தான் இதைச் செய்தேன் என்று கண்டு பிடிக்கப்பட்டால், அம்மா தண்டனை கொடுப்பார்கள். நாமே இதை ஒத்துக் கொள்ளலாமே!" என்று, உடைந்த கண்ணாடித் துண்டுகளைக் கையில் எடுத்துக் கொண்டு தாயிடம் வந்தாள்.

"அம்மா, நான் இதை தெரியாமல் உடைத்து விட்டேன். என்னை மன்னியுங்கள்" என்று கண்ணீரோடு சொன்னாள்.

மகள், தன் தவறை உணர்ந்து, மனந்திரும்பி வந்தபடியினால், தாய் சந்தோஷப்பட்டு, அந்த உடைந்த

கண்ணாடித் துண்டுகளை தன் கையிலே வாங்கிக் கொண்டு, "மகளே, நான் உன்னை மன்னித்து விட்டேன்.

இனி இப்படி தவறு செய்யாதபடி ஜாக்கிரதையாயிரு" என்று சொல்லி அனுப்பினார்கள். மகள் சந்தோஷமாக விளையாடப் போனாள்.

இரண்டு நாட்கள் கழிந்தது. அந்த மகள் தெருவிலே விளையாடிக் கொண்டிருக்கும்போது, இரண்டு நாட்களுக்கு முன்பாக, தான் உடைத்த கண்ணாடிப் பாத்திரம் அங்குள்ள குப்பைத் தொட்டியில் கிடப்பதைப் பார்த்தாள்.

அதை தன் கைகளில் எடுத்துக் கொண்டு தாயிடம் வந்து, "அம்மா, நான் இதை இரண்டு நாட்களுக்கு முன்பாக உடைத்து விட்டேன், என்னை மன்னியுங்கள்'' என்று மீண்டுமாய் சொன்னால், அந்தத் தாய்க்கு எப்படியிருக்கும்?

யோசித்துப் பாருங்கள்! "நான்தான் அப்போதே உன் தவறை மன்னித்து விட்டேனே! குப்பைத் தொட்டியில் போட்ட, உடைந்த கண்ணாடிப் பாத்திரத்தை ஏன் எடுத்து வந்தாய்?" என்று வேதனைப்பட்டிருப்பார்கள் அல்லவா!

ஒரு தாயைக் காட்டிலும் அதிகமாக நம் மீது அன்பு வைத்திருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் நம்மைப் பார்த்து அப்படித்தான் வேதனைப்படுவார்.

**உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டது.** ஆண்டவர் உங்கள் பழைய பாவங்களை மன்னித்து, மறந்து விட்டார். இனி அதை அவர் நினைக்கவே மாட்டார். அதை கடலின் ஆழத்திலே போட்டு விட்டார் **(மீகா 7:19)**.

இனிமேல் அந்தப் பாவங்களைச் சொல்லி ஜெபிக்காதீர்கள். உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டதற்காக அவரை துதியுங்கள்.

இயேசு கிறிஸ்து உங்களுக்குள் வந்து விட்டார்! உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது மட்டுமல்ல, இப்பொழுது இயேசு கிறிஸ்து உங்கள் இருதயத்திற்குள் வந்து விட்டார். இது எத்தனை பெரிய சந்தோஷம்! வானத்தையும், பூமியையும் உண்டாக்கின ஆண்டவர், இப்போது உங்களுக்குள் வந்து விட்டார். இதை **விசுவாசியுங்கள்.**



**“இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு,** –தன் இருதயக்– **கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து,..” (வெளி. 3:20)** என்று சொன்ன இயேசு கிறிஸ்து, இப்போது உங்கள் இருதயத்திற்குள் வந்து விட்டார்.

ஊழியக்காரர் பிரசங்கம் பண்ணும்போது, அவர் மூலமாக இயேசு கிறிஸ்து உங்கள் இருதயக் கதவைத் தட்டினார்.

நீங்கள் அந்த சத்தத்தைக் கேட்டு, மனந்திரும்பி, “இயேசுவே, என் உள்ளத்தில் வாரும்” என்று ஜெபித்தபோது, உங்கள் இருதயக் கதவை இயேசு கிறிஸ்துவுக்காகத் திறந்தீர்கள்.

இயேசு கிறிஸ்து உங்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டு, உங்கள் உள்ளத்தில் வந்து விட்டார்.

இதை விசுவாசித்து, மகிழ்ச்சியோடு இயேசு கிறிஸ்துவைத் துதியுங்கள். “இயேசுவே, என் உள்ளத்தில் வந்து விட்டதற்காக உமக்கு ஸ்தோத்திரம்! என்னோடு நீர் இருக்கிறதற்காக உமக்கு ஸ்தோத்திரம்!” என்று அவரைத் துதியுங்கள்!

## நீங்கள்
## தேவனுடைய பிள்ளைகள்!

இப்பொழுது, நீங்கள் தேவனுடைய பிள்ளையாகி விட்டீர்கள். **‘‘அவருடைய** –இயேசு கிறிஸ்துவின்– **நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.” (யோவான் 1:12)** என்ற வேத வசனத்தின்படி, இயேசுவை விசுவாசித்து ஏற்றுக் கொண்ட நீங்கள், இப்பொழுது

தேவனுடைய பிள்ளாயிருக்கிறீர்கள். இதை விசுவாசித்து, அவரைத் துதியுங்கள்!

தேவனுடைய பிள்ளையாயிருப்பது எவ்வளவு பெரிய சிலாக்கியம்! முன்னே நீங்கள் பிசாசின் பிள்ளையாயிருந்தீர்கள். இப்பொழுது தேவனுடைய பிள்ளையாயிருக்கிறீர்கள்.

வானத்தையும், பூமியையும் உண்டாக்கின தேவனை, "அப்பா பிதாவே" என்று உரிமையோடு அழைக்கிற சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறீர்கள்.

‘‘ஆண்டவரே, என்னை உம்முடைய பிள்ளையாக்கியதற்காக உமக்கு ஸ்தோத்திரம்!" என்று சொல்லி அவரைத் துதியுங்கள்.

## விசுவாசியுங்கள்!

மனந்திரும்புதல், பாவ மன்னிப்பைப் பெறுதல், இரட்சிப்பு, மறுபடியும் பிறத்தல், தேவனுடைய பிள்ளையாக மாறுதல், இயேசுவை ஏற்றுக் கொள்ளுதல்... இவையெல்லாம் ஒரே அனுபவத்தைத்தான் குறிக்கிறது. இந்த அனுபவத்தை இப்பொழுது நீங்கள் பெற்று விட்டீர்கள்.

உங்கள் விசுவாசத்தினாலேதான் இந்த அனுபவத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**‘‘...நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.**

**தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே,**

**அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்.**

**கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு;" (எபேசியர் 2:3,4,5,8)**

**உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டது** என்று விசுவாசியுங்கள். **இயேசு கிறிஸ்து இப்பொழுது உங்கள் உள்ளத்தில் இருக்கிறார்** என்று விசுவாசியுங்கள்.

**இப்பொழுது, நீங்கள் தேவனுடைய பிள்ளை** என்று விசுவாசியுங்கள். நீங்கள் விசுவாசித்து, கர்த்தரைத் துதிக்கும்போது, இரட்சிப்பின் சந்தோஷம் உங்கள் உள்ளத்தை நிரப்புவதை உணர்வீர்கள்.

இனி யாராவது உங்களைப் பார்த்து, “நீங்கள் இரட்சிக்கப் பட்டிருக்கிறீர்களா?” என்று கேட்டால், “ஆம். நான் இரட்சிக்கப் பட்டிருக்கிறேன், இயேசு கிறிஸ்து என் பாவங்களை மன்னித்து விட்டார்” என்று தைரியமாகச் சொல்லுங்கள்.

**உங்கள் இரட்சிப்பின் அனுபவத்தை சந்தேகப்படாதிருங்கள்.**

இனி கூட்டங்களில், இரட்சிக்கப்பட அழைப்புக் கொடுக்கும் போது, உங்கள் கைகளை உயர்த்தாதிருங்கள். “இயேசுவை ஏற்றுக் கொள்ள முன் வாருங்கள்” என்றால், முன்செல்லாதீர்கள்.

நீங்கள் ஏற்கனவே இயேசுவை ஏற்றுக் கொண்டு விட்டீர்கள்! உங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டது! இப்பொழுது இயேசு கிறிஸ்து உங்களோடுதான் இருக்கிறார்.

ஆகவே, நீங்கள் முன் செல்ல வேண்டியதில்லை. கூட்டத்தில் இரட்சிக்கப்பட வேண்டிய மற்றவர்களுக்காக ஜெபித்துக் கொண்டிருங்கள்.

**ஒரு முறைதான் இரட்சிப்பு!** ஒவ்வொரு கூட்டத்திலும் இரட்சிக்கப்பட வேண்டியதில்லை, ஒருமுறை நாம் இந்த உலகத்தில் பிறப்பதைப்போல, ஒரு முறைதான் மறுபடியும் பிறக்க வேண்டும்.

ஆனால், நாம் பெற்றுக் கொண்ட பாவ மன்னிப்பை, இரட்சிப்பைக் காத்துக் கொள்ள, நாம் கிரியை செய்ய வேண்டும்.

## இனிமேல் என்ன செய்ய வேண்டும்?



**இனி பாவம் செய்யாதிருங்கள்!**

பாவியான ஒரு பெண், இயேசு கிறிஸ்துவண்டை கொண்டு வரப்பட்டாள். அவள், தன் பாவத்திற்காக மனம் வருந்தினாள்.

இயேசு கிறிஸ்து அவள் பாவங்களை மன்னித்து, அவளை நோக்கி; **"...நீ போ, இனிப் பாவஞ்செய்யாதே...." (யோவான் 8:11)** என்றார். இயேசு கிறிஸ்து உங்கள் பாவங்களை மன்னித்து விட்டார். **இனி பாவம் செய்யாதபடி உங்களைக் காத்துக் கொள்வதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.**

பாவத் தொடர்புகளை துண்டித்துக் கொள்ளுங்கள். உங்கள் நண்பர்கள், நீங்கள் பாவம் செய்வதற்கு ஏதுவாயிருப் பார்களானால், அந்த நண்பர்களை விட்டு விலகுங்கள்.

இயேசு கிறிஸ்து உங்களுக்கு நல்ல நண்பராயிருப்பார். நீங்கள் பெற்றுக் கொண்ட **விலையேறப் பெற்ற இரட்சிப்பைக் காத்துக் கொள்வதில் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.**

ஒரு ஏழை வாலிபன், ஒரு பணக்கார வாலிபனோடு சிநேகமாயிருந்தான். ஒருநாள், அந்தப் பணக்கார வாலிபன், அந்த ஏழை வாலிபனை சூதாட்டத்திற்கு அழைத்துப் போனான்.

திடீரென்று போலீஸ் வந்தது. இருவரையும் கைது செய்து, நீதிமன்றத்தில் நிறுத்தினார்கள். ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்து, தீர்ப்பு கூறப்பட்டது. பணக்கார வாலிபனுடைய தகப்பனார் வந்து ஆயிரம் ரூபாயைச் செலுத்தி, தன் மகனை விடுதலையாக்கி அழைத்துச் சென்றார்.



ஏழை வாலிபனோ; சிறையில் அடைக்கப்பட்டான். அவனுடைய தாய் ஒரு ஏழை விதவை. தினமும் வீட்டு வேலைகளைச் செய்தே தன் மகனைப் படிக்க வைத்துக் கொண்டிருந்தாள்.

ஆயிரம் ரூபாய் என்பது அந்த ஏழை விதவைக்கு ஒரு பெரிய காரியம். என்றாலும், தன் மகனை விடுதலையாக்க வேண்டும் என்பதற்காக கல் உடைக்கும் கடினமான வேலைக்குச் சென்றாள்.

இரவும், பகலும் வேலை செய்து, ஆயிரம் ரூபாய் சேர்த்துக் கொண்டு மகனை விடுதலையாக்க வந்தாள்.

விடுதலை பெற்று வந்த மகன், தாயின் கைகளைப் பார்த்தான். அதில் காயங்களைக் கண்டான். கால்களைப் பார்த்தான்; அதிலும் காயங்கள். சரீரமெல்லாம் இளைத்து சோர்வோடு, காணப்பட்டாள். “எப்படி அம்மா இந்தக் காயங்கள் வந்தது?” என்று விசாரித்தான்.

“உனக்காகத்தான் மகனே! உன்னை விடுதலையாக்க இரவும், பகலும் கடினமாக வேலை செய்தேன். அப்பொழுது ஏற்பட்ட காயங்கள்தான்” என்று தாய் மகிழ்ச்சியோடு கூறினாள். காயப்பட்ட தாயின் கரங்களைப் பிடித்துக் கொண்டு, “இனி தவறு செய்ய மாட்டேன்” என்று அழுதான்.

சில நாட்கள் கழிந்து, பணக்கார நண்பன் இவனைப் பார்க்க வந்தான். “மறுபடியும் சூதாட்டத்திற்குப் போகலாம் வா” என்று அழைத்தான். ஏழை வாலிபன், “முடியாது” என்று மறுத்தான். பணக்கார வாலிபன், ‘‘போலீஸ் பிடித்து விடும் என்று பயப்படுகிறாயா! பிடித்தாலும் பணம் கட்டி விடுதலையாகி விடலாமே, வா” என்றான்.

அந்த ஏழை வாலிபன் சொன்னான், "உனக்கு விடுதலை சுலபமாகக் கிடைத்தது. ஆனால் எனக்குக் கிடைத்த விடுதலை; என் தாயின் காயங்களால், அவர்கள் எனக்காகச் சிந்திய இரத்தத்தினால் கிடைத்தது. நான் இன்னொரு முறை என் தாயைக் காயப்படுத்த விரும்பவில்லை" என்று சொல்லி விட்டுக் கடந்து போனான்.

**உங்களுக்குக் கிடைத்த பாவ மன்னிப்பு, விடுதலை, சாதாரணமானதல்ல!** இயேசு கிறிஸ்து உங்களுக்காக சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டு, தொங்கினார். தன் பரிசுத்தமுள்ள இரத்தத்தைச் சிந்தினார்.

**அவருடைய பாடுகளினால் வந்த இந்த இரட்சிப்பைக் காத்துக் கொள்ளுங்கள்.** அவருடைய அன்பை மறந்து விடாதீர்கள். **மறுபடியும் பாவம் செய்து, அவரை வேதனைப்படுத்தாதீர்கள்.**

**விக்கிரகங்களுக்குப் படைத்த அசுசியானவைகளுக்கும், வேசித்தனத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும், இரத்தத்திற்கும் விலகியிருங்கள் (அப். 15:20).**

**விக்கிரகங்களுக்குப் படைத்த பொருட்களைச் சாப்பிடாதபடி விலகியிருங்கள்.** இனிமேல் விக்கிரகங்களுக்கும், உங்களுக்கும் சம்பந்தமில்லை. நீங்கள் ஏற்றுக் கொண்ட இயேசு கிறிஸ்து, பேச முடியாத, பார்க்க முடியாத விக்கிரகமல்ல. உங்கள் உள்ளத்தில் வாசம் பண்ணுகிற உயிருள்ள ஆண்டவர்.

உங்கள் சரீரம், ஆண்டவர் இயேசு கிறிஸ்து வாசம் பண்ணும் ஆலயமாயிருக்கிறது. ஆகவே, **வேசித்தனத்திற்கு விலகியிருங்கள்.** எந்த மிருகத்தினுடைய, பறவையினுடைய இரத்தத்தையும் புசிக்கக் கூடாது.

**''மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்க வேண்டாம்.'' (ஆதி. 9:4)** என்று கர்த்தர் சொல்கிறார். இரத்தத்திலேதான் உயிர் இருக்கிறது. ஒரு மிருகம் நெருக்குண்டு சாகும்போது, அதன் இரத்தம் சரீரத்திற்குள் உறைந்து விடும். ஆகவேதான், "நெருக்குண்டு செத்ததைப் புசிக்கக் கூடாது" என்று வேதம் சொல்கிறது.

## இயேசு கிறிஸ்துவை தொழுது கொள்ளுங்கள்!



கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவே உங்களை இரட்சித்தவர். **அவரை மாத்திரமே தொழுது, ஸ்தோத்தரிக்க வேண்டும்.** இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறு யார் மீதும் உங்கள் விசுவாசத்தை வைக்கக் கூடாது. இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வம். அவர் ஒருவரே நமக்காக சிலுவையில் மரித்து, மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தவர்.

ஒரு ஊழியக்காரர் மூலமாக நீங்கள் இரட்சிப்பிற்குள் வழி நடத்தப்பட்டிருக்கலாம்! அந்த ஊழியக்காரரையல்ல, ஊழியர் மூலமாக உங்களை இரட்சித்த இயேசு கிறிஸ்துவையே மகிமைப்படுத்த வேண்டும். **"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.**

**மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்;" (யாத். 20:3,4,5)** என்று கர்த்தர் சொல்கிறார்.

# வேதம் வாசித்து, ஜெபியுங்கள்!



இப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளைகள்! உங்கள் தகப்பனாகிய ஆண்டவரிடத்தில் நீங்கள் தினமும் பேச வேண்டும். அவர் பேசுவதையும் கேட்க வேண்டும்.

ஜெபத்தின் மூலமாக நீங்கள் அவரோடு பேசலாம்! வேதத்தை வாசிப்பதின் மூலமாக அவர் உங்களோடு பேசுவதைக் கேட்கலாம்!

**தினமும் குறைந்தது ஒரு மணி நேரம் தனித்து வேதம் வாசித்து, ஜெபியுங்கள்.** அதிகாலையில் எழுந்து, முதலாவது ஆண்டவரோடு பேசுங்கள். காலையில் ஒரு மணி நேரம்; முடியாவிட்டால் காலையில் அரை மணிநேரம், மாலையில் அரை மணிநேரம் தேவனுடைய பாதத்தில் அமர்ந்திருங்கள்.

முதலாவது, வேதத்தை வாசித்து, தியானியுங்கள். வேதப் புத்தகம் இல்லா விட்டால், உங்களுக்கென்று ஒரு வேதப் புத்தகத்தை வாங்கிக் கொள்ளுங்கள். முதலாவது, புதிய ஏற்பாட்டை வாசித்து, தியானியுங்கள். வேதப் புத்தகம் தேவனுடைய வார்த்தை. ஜெபத்தோடு வாசியுங்கள். **முடிந்தால் முழங்காலில் நின்று வாசியுங்கள்.** அதன் மூலம் ஆண்டவர் உங்களோடு பேசுவதைக் காண்பீர்கள்.

வேதத்தை தியானித்த பிறகு ஜெபியுங்கள். ஆண்டவர் உங்களை இரட்சித்து, அவருடையப் பிள்ளையாக்கியதற்காக அவரைத் துதியுங்கள். ‘‘இந்த நாள் முழுவதும் பாவம் செய்யாதபடி என்னைக் காத்துக் கொள்ளும்’’ என்று ஜெபியுங்கள்.

உங்கள் வீட்டிலுள்ள இரட்சிக்கப்படாதவர்கள், இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். உங்கள் நண்பர்கள், உறவினர்கள் யாவரும் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள். உங்கள் குடும்பத்திற்காக ஜெபியுங்கள். இயேசு கிறிஸ்து, உங்கள் ஜெபத்தின் மூலமாக அற்புதங்களைக் காணச் செய்வார். இரவில் ஜெபிக்கும்போது, உங்கள் இருதயத்தை ஆராய்ந்து பார்த்து அர்ப்பணித்து ஜெபியுங்கள். அந்த நாளில் ஏதாவது தவறுகள், பாவங்கள் செய்திருந்தால், ஆவியானவர் உணர்த்தினால் அதை அறிக்கையிட்டு ஜெபியுங்கள்.

**‘‘நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.’’ (1யோவான் 1:9).**

முன்பு நீங்கள் என்ன பாவம் செய்தாலும், அது உங்கள் உள்ளத்தை அதிகம் பாதிக்காது. காரணம், முன்பு நீங்கள் பாவத்திலேயே இருந்தீர்கள். ஆனால், இப்பொழுது ஒரு சின்னப் பாவம் செய்தாலும், அது உங்கள் சமாதானத்தைப் பாதிக்கும். ஒரு சின்னக் கோபம், ஒரு சின்னப் பொய், உங்கள் உள்ளத்தை வாதிக்கும். “ஐயோ, நான் இந்தத் தவறை செய்து விட்டேனே!” என்ற வேதனை உண்டாகும். காரணம், பரிசுத்த ஆவியானவர் உங்கள் பாவத்தை உடனே சுட்டிக் காண்பிப்பார்.

உடனே அந்த இடத்திலேயே, “ஆண்டவரே, நான் இந்தப் பாவத்தைச் செய்து விட்டேன், என்னை மன்னியும்” என்று அறிக்கையிட்டு ஜெபியுங்கள். உடனே, ஆண்டவர் மன்னித்து விடுவார். மறுபடியும் அந்தப் பாவத்தைச் செய்யாதபடியிருக்க தேவ பெலனை ஜெபத்திலே கேளுங்கள். ஒரே நாளில் முழுப் பரிசுத்தம் வந்து விடாது. **நீங்கள் வேதம் வாசித்து, ஜெபித்து, ஜெபித்து ஆண்டவருக்குள் வளரும் போதுதான் பரிசுத்தத் திலும் வளர்ந்து கொண்டே யிருப்பீர்கள்.**

## பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்!



பரிசுத்த ஆவியினால்தான் நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள். ஊழியக்காரர் பிரசங்கித்தபோது, பரிசுத்த ஆவியானவர்தான் அவர் மூலமாய் உங்கள் உள்ளத்தில் பேசி, உங்கள் பாவத்தை உணர்த்தி, உங்களை மனந்திரும்பச் செய்தார்.

**"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்.'' (எபே. 1:13)** நீங்கள் இரட்சிக்கப்பட்டபோது, பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெற்றுக் கொண்டீர்கள்.

ஆனால், இந்த அனுபவம் போதாது. பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரம்பி வழிகிற அனுபவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதைத்தான் இயேசு கிறிஸ்து, **''நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**

**உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக் கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்." (யோவான் 14:16,17)**

இந்தப் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ளும்போதுதான் நாம் வெற்றியுள்ள, பரிசுத்தமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியும்.

பரிசுத்த ஆவியானவர்தான் பாவத்தை ஜெயிக்க, பிரச்சனைகளை மேற்கொள்ள, சாத்தானை ஜெயிக்க வல்லமை தருகிறார்.

1972ம் ஆண்டு ஆண்டவர் என்னை இரட்சித்தார். ஆனால், பரிசுத்த வாழ்க்கை வாழ தடுமாறினேன். 1974ம் ஆண்டு, ஆண்டவர் என்னை பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்தார். அதன் பிறகுதான், வெற்றியுள்ள வாழ்க்கை வாழ முடிந்தது.

நீங்களும் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை விரும்புங்கள். அதற்காக ஜெபியுங்கள். ஆண்டவர், உங்களுக்கும் அபிஷேகத்தைத் தருவார்.

**"பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து,...எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்..." (அப். 1:8)** என்று இயேசு கிறிஸ்து சொல்கிறார்.

## தேவப் பிள்ளைகளோடு ஐக்கியப்படுங்கள்!



கிறிஸ்தவ வாழ்க்கையில் முக்கியமானது; தேவப் பிள்ளைகள் கூடி கர்த்தரை ஆராதிப்பது. நீங்கள் எந்த சபைக்கும் போகாதவர்களாயிருந்தால், நீங்கள் ஆண்டவருக்குள் வளர்வதற்கு பிரயோஜனமாயிருக்கிற சபையில் அங்கமாகி, தேவப் பிள்ளைகளோடு ஐக்கியப்பட்டு, கர்த்தரை ஆராதியுங்கள். **சபை கூடி வருதலை விட்டு விடாதீர்கள்.**

ஞாயிற்றுக் கிழமைதோறும் தவறாமல் ஆராதனையில் பங்கு பெற்று ஆண்டவரைத் தொழுது கொள்ளுங்கள். ஆராதனையில் பங்கு பெற்று சத்திய வசனத்தைக் கேட்கக் கேட்கத்தான் ஆண்டவருக்குள் வளர முடியும். கர்த்தருடைய வசனம் அறிவிக்கப்படுகிற இடங்களுக்குச் சென்று வசனத்தைக் கேளுங்கள். தேவப் பிள்ளைகள் கூடி ஜெபித்தால், நீங்களும் அவர்களோடு ஐக்கியப்பட்டு ஜெபியுங்கள்.

எந்தச் சபையைச் சார்ந்தவர்களாயிருந்தாலும், எல்லா கர்த்தருடைய பிள்ளைகளையும் நேசியுங்கள். **யாரையும் அற்பமாக எண்ணாதிருங்கள்.** எல்லா ஊழியர்களையும் நேசியுங்கள்.

## இயேசு கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்யுங்கள்!

உங்களைப் பாவத்திலிருந்து, சாபத்திலிருந்து இரட்சித்த, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்து கொண்டேயிருங்கள். அவர் உங்களை இரட்சித்து, உங்களுக்குக் கொடுத்த பாவ மன்னிப்பின் சந்தோஷத்தை மற்றவர்களுக்குச் சொல்லுங்கள்.

சமயம் கிடைக்கும் போதெல்லாம் இயேசு கிறிஸ்து உங்களுக்குச் செய்த நன்மைகளைச் சாட்சி சொல்லி அவரை மகிமைப்படுத்துங்கள். உங்கள் குடும்பத்தாருக்கு, உறவினர்களுக்கு, நண்பர்களுக்கு இயேசு கிறிஸ்து உங்களுக்குச் செய்ததைச் சொல்லுங்கள்.

சமயம் கிடைக்கும்போது, ஊழியம் செய்கிற மக்களோடு சேர்ந்து இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யுங்கள். உங்கள் **காணிக்கையினாலும் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தைத் தாங்கலாம்.** ஏதாவது ஒரு விதத்தில் இயேசு கிறிஸ்துவுக்காக ஏதாவது செய்து கொண்டேயிருங்கள். ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து உயர்த்துவார்.

## இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருங்கள்!

**“முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.” (மத். 24:13)** என்று இயேசு கிறிஸ்து சொன்னார். இரட்சிக்கப்பட்டிருக்கிற நீங்கள் முடிவு பரியந்தம் இயேசு கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது, பஞ்சு மெத்தையில் நடக்கிற வாழ்க்கையல்ல. கற்களும், முட்களும் நிறைந்த பாதை. கிறிஸ்தவ வாழ்க்கை சந்தோஷமும், சமாதானமும், ஆசீர்வாதமும் நிறைந்த வாழ்க்கைதான்; அதே சமயத்தில் பாடுகள் நிறைந்த வாழ்க்கை!

**பாடுகளைக் கண்டு பயப்படாதீர்கள். உபத்திரவங்களைக் கண்டு சோர்ந்து போகாதீர்கள்.** உங்களை இரட்சித்த இயேசு கிறிஸ்து உங்களோடிருந்து உங்களைத் தாங்கி நடத்துவார்.

உங்கள் சொந்தக் குடும்பத்தில் நிந்தைகள், நெருக்கங்கள் வரலாம்! இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டதின் நிமித்தம், இருக்கிற இடத்தில், வேலை செய்கிற இடத்தில் உபத்திரவங்கள் வரலாம்! சோர்ந்து போகாதீர்கள்.

**''...உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்..." (யோவான் 16:33)** என்ற இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைத்துக் கொள்ளுங்கள். **"...நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்..." (அப். 14:22)** என்று தேவனுடைய வார்த்தை சொல்கிறது.

ஆகவே, உபத்திரவங்களைக் கண்டு முன் வைத்த காலை பின் வைக்காதீர்கள். **இயேசு கிறிஸ்துவை விட்டு விடாதீர்கள்.** அவரில் நிலைத்திருங்கள். அவரில் நிலைத்திருக்கிறவர்கள்தான் மோட்ச பாக்கியத்தை பெற முடியும்.

உபத்திரவத்திலும் இயேசு கிறிஸ்து உங்களுக்கு உதவி செய்வார். உங்களை உபத்திரவப்படுத்துகிற மக்களுக்கு நடுவில் உங்களை உயர்த்துவார். உங்களுக்கு ஜெயம் கொடுப்பார். அவர் உங்களை வெட்கப்பட விடமாட்டார்.

**"...இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்..." (மத். 28:20)** என்று இயேசு கிறிஸ்து வாக்குக் கொடுத்திருக்கிறார். அவர் கடைசி வரை உங்களோடிருந்து, உங்களை ஆசீர்வதித்து, பாதுகாத்து வழி நடத்துவார்.

## இயேசு கிறிஸ்து திரும்ப வருகிறார்!



சிலுவையில் நமக்காக மரித்து, உயிர்த்தெழுந்த **இயேசு கிறிஸ்து, மறுபடியும் இந்த உலகத்திற்கு வரப் போகிறார்.** அப்பொழுது இந்த உலகம் முடிவடையும்.

இப்பொழுது இயேசு கிறிஸ்து, அவருடைய பிள்ளைகளாகிய நமக்காக பரலோகத்தில் ஒரு இடத்தை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். **''...உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்." (யோவான் 14:3)** என்று இயேசு கிறிஸ்து வாக்குக் கொடுத்திருக்கிறார்.

இந்த உலகம் நமக்கு நிரந்தரமான இடமல்ல. **கொஞ்சக் காலம்தான் இந்த உலகத்தின் பாடுகள்.**

ஆனால், பரலோகத்தில் நித்திய காலமாக இயேசு கிறிஸ்துவோடு மகிழ்ந்திருப்போம். அங்கே மரணமில்லை, வியாதியில்லை, கண்ணீர் இல்லை, வேதனை இல்லை.

அந்த இடத்திற்கு நம்மை அழைத்துச் செல்லத்தான், இயேசு கிறிஸ்து வரப் போகிறார். அவருடைய வருகையில் நாம் மகிழ்ச்சியோடு காணப்பட வேண்டுமானால், அவரில் நிலைத்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவை இரட்சகராக,

ஆண்டவராக ஏற்றுக் கொண்டவர்கள், அவர் மூலமாய் பாவ மன்னிப்பைப் பெற்றவர்கள், அவருக்காக பரிசுத்த வாழ்க்கை வாழ்கிறவர்கள்தான் மகிழ்ச்சியோடு பரலோக ராஜ்யம் செல்ல முடியும்.

**"...பிள்ளைகளே, அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில்**–இயேசு கிறிஸ்துவில்– **நிலைத்திருங்கள்." (1யோவான் 2:28)**

**"சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்." (1தெச. 5:23,24)**

கிருபை உங்களோடிருப்பதாக!

ஆமென்!

## ஆசிரியரைப் பற்றி...



பக்தியுள்ள ஒரு இந்துக் குடும்பத்தில் பிறந்து, வைராக்கியமாய் வளர்க்கப்பட்ட இவர், தனது 14வது வயதில் இருதயம் வீங்கி, வலது கால் நடக்க முடியாதபடி **டாக்டர்களால் கைவிடப்பட்டார்.** இவரை இயேசு கிறிஸ்து அற்புதமாய் சுகமாக்கினார்.

அதன் பின், இயேசு கிறிஸ்து இவரை இரட்சித்து, அபிகேத்து, ஊழியத்திற்கு அழைத்து, இன்று வல்லமையாய் பயன்படுத்தி வருகிறார். "**இயேசு விடுவிக்கிறார்**" என்ற ஊழியத்தின் மூலம் பலவிதங்களில் உலகின் பல பகுதிகளிலும் கர்த்தர் சகோதரரைக் கொண்டு ஆயிரக்கனக்கான மக்களுக்கு ஆத்துமாவிலும், சரீரத்திலும் ஆசீர்வாதத்தைக் கொடுத்து வருகிறார்.

இந்த ஊழியத்தின் மூலம், "**இயேசு விடுவிக்கிறார்**" என்ற **மாதப் பத்திரிக்கை**யும் வெளியிடுகிறோம். தேவையுள்ளவர்கள் எழுதுங்கள். இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

**For Counselling and Prayer:**

Jesus Redeems MINISTRIES

JESUS REDEEMS MINISTRIES

Nalumavadi - 628211, Thoothukudi Dist., Tamilnadu, India.
**Phone:** +91 4639 - 35 33 33, **Whatsapp:** +91 9842735305
**For 24 hrs Prayer Support: +91 4639 - 35 35 35**
Email: partners@jesusredeems.org